


s

**07. 01. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பை இந்திய கடலோர காவல்படையின், சமுத்ர பிரதாப் கண்காணிப்பு கப்பல் உறுதி செய்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வான்வெளி திறனின் முக்கிய ஆதாரமாக நாட்டின் மின் மற்றும் எரிசக்தி ஆற்றல் திகழ்கிறது என்று விமான படை கூறியுள்ளது.

3. திண்டுக்கல்லில் ஆயிரத்து 595 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்ட பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டியதுடன், முடிவுற்ற பணிகளையும் தொடங்கிவைத்தார்.

4. சத்குரு ஶ்ரீதியாகராஜ சுவாமிகளின் 179வது ஆராதனை விழாவின், பஞ்சரத்ன கீர்த்தனை இசை நிகழ்ச்சி திருவையாற்றில் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

5. பர்மிங்ஹாமில் 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஸ்குவாஷ் சேம்பியன் பட்ட போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் வெள்ளி பதக்கத்தை வென்றார்.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

இந்திய கடலோர காவல்படையின், சமுத்ர பிரதாப் கண்காணிப்பு கப்பல் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

கோவாவில் இக்கண்காணிப்பு கப்பல் தொடங்கி வைக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்த அவர், சுய சார்பு பாரதத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இக்கப்பல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

இக்கடலோர காவல்படையின் கண்காணிப்பு கப்பலை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நேற்றுமுன்தினம் கோவாவில் தொடங்கிவைத்தது குறிப்பிடத்தக்கது.

*************

எஸ்.ஜெய்சங்கர்

வெனிசுலா நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் அந்நாட்டு மக்களின் நலனும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

லக்ஸம்பர்க்கில் இந்திய வம்சாவளியினரிடையே கலந்துரையாடிய அவர், அரசியல் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் அந்நாட்டுடனான இந்தியாவின் நட்புறவை எடுத்துரைத்தார்.

இருநாடுகளின் பிணைப்பிற்கு இந்திய வம்சாவளியினரின் பங்கையும் அமைச்சர் பாராட்டியுள்ளார்.

ஐரோப்பா உடனான நட்புறவு இந்தாண்டில் வளர்ச்சி அடையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

*************

நிதியமைச்சகம்

நாட்டில் 3 ஆண்டு தொடர் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் வகையில் பொருளாதார விவகாரங்கள் துறை பொது தனியார் பங்களிப்பு திட்டத்தை உருவாக்கியுள்ளது.

சென்ற பட்ஜெட்டில் இதற்கான அறிவிப்பு வெளியிட்டதை தொடர்ந்து இந்நடவடிக்கை.

இதன்மூலம் அமைப்பு சார்ந்த நெறிமுறைகளின் கீழ் தேச கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதி தனியார் துறைக்கு வழங்கப்படுகிறது.

தனியார் – பொதுபங்களிப்பு திட்டத்தின் கீழ் 17 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 852 பணிகளை மத்திய கட்டமைப்பு அமைச்சகம், மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் இணைந்து மேற்கொள்ளும் என்று நிதியமைச்சகம் கூறியுள்ளது.

இந்த தொடர் வளர்ச்சி திட்டங்களால் முதலீட்டாளர்கள், கட்டமைப்பு துறையினர் ஏனைய பங்குதாரர்கள் ஒருங்கிணைந்து பணிகளை திட்டமிட்டு ஆக்கப்பூர்வமான முடிவுகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*************

ராக்கெட்

PSLV C 62 ராக்கெட், EOS – N 1 புவி கண்காணிப்பு செயற்கைகோளுடன் வரும் 12ஆம் தேதி சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து காலை 10.17 மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு முகமை வடிவமைத்துள்ள இந்த செயற்கைகோளுடன் நம் நாடு மற்றும் சர்வதேச நாடுகள் தயாரித்த 18 இணை சிறிய ரக செயற்கைகோள்களும் விண்ணில் செலுத்தப்பட உள்ளன.

*************

சஞ்சீவ் குரேஷியா

நாட்டின் மின் எரிசக்தி ஆற்றல், வான்வெளி திறனின் முக்கிய ஆதாரமாக திகழ்கிறது என்று ஏர்.மார்ஷல் சஞ்சீவ் குரேஷியா தெரிவித்துள்ளார்.

ராணுவ மின் செயல்பாடு இயக்கத்தின் துவக்க நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், சுற்றுச்சூழல், தளவாடங்களின் நீடித்த செயலாக்கம், போன்றவற்றிற்கும் மின்னாற்றல் அத்தியாவசியமானது என்றார்.

ராணுவமும், வான்வெளி படைகளும் தற்போது முனைப்புடன் தங்களது செயல்திறனை வெளிப்படுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டில் தளவாடங்கள் உற்பத்தி செய்ப்படுவதால் நெருக்கடி காலங்களில் இவற்றின் செயல்பாடும், பயன்பாடும் எளிதாக இருப்பதாக கூறினார்.

ஹைட்ரஜன் சார்ந்த திட்டங்கள் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகள் போன்றவற்றை ஒருங்கிணைந்து வான்சார்ந்த ஆராய்ச்சிகள் முன்னேறி செல்வதாக அவர் எடுத்துரைத்தார்.

அரசு, ஆராய்ச்சி துறை, தொழில்துறை, கல்விதுறை ஆகியவை இணைந்து நாட்டின் ஆளுமையை கட்டமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

*************

முதலமைச்சர்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் 100 ஏக்கரில் உலக தரத்தில் சுற்றுலா முதலீட்டு பூங்கா அமைக்கப்படும் உள்ளிட்ட 8

அறிவிப்புகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

திண்டுக்கல்லில் ஆயிரத்து 595 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதுடன், முடிவடைந்த திட்ட பணிகளை துவக்கிவைத்து பேசிய அவர், பழனி திருக்கோவில் 6 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்றார்.

வாய்ஸ்

இந்நிகழ்வில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசின் நல திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்..

*************

திருவையாறு

திருவையாற்றில் சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 179வது ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைத்தல் இன்று வெகு விமரிசையாகவும் பக்தி சித்தையுடனும் நடைபெற்றது.

கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகய்யர் முக்தி அடைந்த புஷ்ய பகுள பஞ்சமி தினமான இன்று காவிரிக்கரையில் அவரது நினைவிடத்தில் பிரபல இசைக்கலைஞர்கள் ஒன்றுகூடி நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ, ஆகிய ஐந்து ராகங்களை உள்ளடக்கிய பஞ்சரத்ன கீர்த்தனைகளுடன் இசை அஞ்சலி செலுத்தினர்.

Music

ஆஞ்சநேயர் உற்சவத்துடன் இன்றுமாலை ஆராதனை விழா நிறைவடையும்.

*************

கே.என்.நேரு

திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை பிரிவு மற்றும் நவீன மருத்துவ வசதிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

கம்பரசம்பேட்டை காவிரி ஆற்றுப்படுகையில் புதிதாக கட்டப்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தின் குடிநீர் வழங்கும் பணியையும் அவர் துவக்கிவைத்தார்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய திட்டங்களையும், முடிவுற்ற திட்ட பணிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

*************

எ.வ.வேலு

தமிழ்நாட்டின் சாலை கட்டமைப்பு வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு..எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் 47 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய புறவழிச் சாலையை திறந்துவைத்து பேசியஅவர், நாமக்கல் அருள்மிகு நயினா மலை வரதராஜபெருமாள் திருக்கோவிலுக்கு தார்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 297 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

*************

கணக்கெடுப்பு

கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆனைமலை புலிகள் காப்பகத்தில் குளிர்கால பிந்தய வனவிலங்கு கணக்கெடுப்பு பணிகள் இன்று தொடங்கின.

வரும் 12ஆம் தேதிவரை 32 சுற்றுகளாக நடைபெறும் இக்கணக்கெடுப்பு பணியில் 186 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

புலிகள் கணக்கெடுப்பு

ஈரோடு அந்தியூர் பெரியார் வன உயிரின சரணாலயத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணிகள் 2ஆவது நாளாக இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

யானை போன்ற வன விலங்குகள் முதல் 3 நாட்களும்,

தாவர உண்ணிகள் அதற்கடுத்த 3 நாட்களும் கணக்கெடுக்கப்பட்டு 11ஆம் தேதி பணிகள் நிறைவு பெறுகின்றன.

*************

ஹெத்தை அம்மன்

நீலகிரி மாவட்டத்தில் 350க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் படுகர் இன மக்களின் குலதெய்வமான ஹெத்தை அம்மன் திருவிழாவின் காணிக்கை செலுத்தும் மாபெரும் நிகழ்வு இன்று நடைபெற்று வருகிறது.

இதையொட்டி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் பேரஹனி ஹெத்தையம்மனுக்கு இன்று காணிக்கை செலுத்துகிறார்.

இந்நிகழ்வை ஒட்டி நீலகிரி மாவட்டம் விழாக்கோலம் பூண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

இருவரி

தர்மபுரி மாவட்டத்தில் சட்டமன்ற உறுதிமொழி குழுவினர் இன்று பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

திரு.வேல்முருகன் தலைமையிலான இக்குழுவினர் புதிய பேருந்து நிலைய கட்டுமானப்பணிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்டவற்றையும் ஆய்வுசெய்தனர்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடமாடும் பாஸ்போர்ட் முகாம் நாளைமுதல் வரும் 10ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் டாக்டர். சுகபுத்ரா இன்று துவக்கிவைத்தார்.

உளுந்தூர்பேட்டை ஆட்டு சந்தையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்றுகாலை இரண்டு கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*************

வானிலை

தென்கிழக்கு வங்க கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெற்றதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

இதன்காரணமாக ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர் நாகை, காரைக்கால், மயிலாடுதுறை மாவட்டங்களில் நாளை மறுநாள் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே ராமநாதபுரம் பாம்பன் நாகை துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

*************

ஸ்குவாஷ்

பர்மிங்ஹாமில் 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஸ்குவாஷ் சேம்பியன் பட்ட போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் வெள்ளி பதக்கத்தை வென்றார்.

இறுதி ஆட்டத்தில் ஃபிரான்சின் லாரனிடம் அவர் தோல்வியடைந்தார்.

*************

பேட்மிண்டன்

கோலாலம்பூரில் நடைபெறும் மலேஷிய ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறினார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை தகுதி பெற்றுள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது